ஊட்டியில்

# மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 141 மனுக்கள்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு நலத்திட்ட உதவிகள் வழங்கினார்



**ஊட்டி ஏப்.29-**

நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு பொதுமக்களிடமிருந்து வீட்டுமனை பட்டா முதியோர் விதவை கல்வி உதவி தொகை வங்கி கடன் சாலை வசதி உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 141 மனுக்களை பெற்றுக் கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும்; மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட கலெக்டர் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி - ஐஏ போட்டி தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமனம் வழங்கும் வகையில் 12 நபர்களுக்கு இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவிக்கான பணிநியமன ஆணைகளையும் 4 நபர்களுக்கு தட்டச்சர் பதவிக்கான பணிநியமன ஆணைகளையும் 1 நபருக்கு சுருக்கெழுத்து தட்டச்சர் பதவிக்கான பணிநியமன ஆணையினையும் என மொத்தம் 17 நபர்களுக்கு வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து கோத்தகிரி கெங்கரை கிராமத்தைச் சேர்ந்த அஸ்வினி என்பவருடைய மகன் செல்வன் யஸ்வந்தின் மருத்துவ செலவிற்கு மாவட்ட கலெக்டரின் விருப்புரிமை நிதியிலிருந்து ரூ.50000-க்கான காசோலையும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் துரைராஜ் என்பவருக்கு ரூ.6700- மதிப்பிலான திரவ பெட்ரோலிய வாயு மூலம் இயங்கும் தேய்ப்பு பெட்டியினையும் கலெக்டர் வழங்கினார். அத்துடன் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் பாரத பிரதமரின் அனைவருக்கும் வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் கேத்தி பேரூராட்சிக்குட்பட்ட அல்லஞ்சி பகுதியில் கட்டப்பட்ட அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான வீடு ஒதுக்கீடு ஆணைகளை 8 பயனாளிகளுக்கு வழங்கினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) கௌசிக் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ராதாகிருஷ்ணன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் செந்தில் குமார் (பொது) பழனிசாமி (நிலம்) கண்ணன் (கணக்குகள்) உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கூடலூரில் அ.தி.மு.க. பூத் கமிட்டி கள ஆய்வு ஆலோசனை கூட்டம்

## முன்னாள் அமைச்சர் செ.ம.வேலுசாமி தலைமையில் நடந்தது



**ஊட்டி ஏப்.29-**

கூடலூரில் அ.தி.மு.க. பூத் கமிட்டி கள ஆய்வு ஆலோசனை கூட்டம் முன்னாள் அமைச்சர் செ.ம.வேலுசாமி தலைமையில் நடைபெற்றது.

நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட அ.தி.மு.க.கூடலூர் நகர கழகம்நெல்லியாளம் நகர கழகம் பந்தலூர் கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பாக நடைபெற்ற பூத் கமிட்டி மற்றும் கள ஆய்வு ஆலோசனை கூட்டம் முன்னாள் அமைச்சர் கழக அமைப்பு செயலாளர் செம. வேலுசாமி தலைமையில் நீலகிரி மாவட்ட கழக செயலாளர் கப்பச்சி டி.வினோத் வர்த்தக அணி மாநில தலைவர் சஜீவன் ஆகியோர் முன்னிலையில் கூடலூரில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கூடலூர் நகர கழக செயலாளர் அனுப் கான் நெல்லியாளம் நகர கழக செயலாளர் டிஎல்எஸ். ராஜா பந்தலூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் ஜான் சன் ஆகியோர் சிறப்பான ஏற்பாட்டினை செய்து வரவேற்புரை ஆற்றினார்கள் இதில் கூடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முக்கிய நிர்வாகிகள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் கருப்புசாமி மாவட்ட மாணவரணி செயலாளர் ஜூலியன் வர்த்தக அணி மாவட்ட செயலாளர் எப்பநாடு கண்ணன் பொதுக்குழு உறுப்பினர் ராஜா தங்கவேலு கூடலூர் மேற்கு ஒன்றிய செயலாளர் பத்மநாதன் கேத்தி பேரூராட்சி செயலாளர் ஜெய் ஏ ராதாகிருஷ்ணன் பாசறை மாவட்ட தலைவர் கார பிள்ளு சுரேஷ் தலைமை கழக பேச்சாளர்கள் கூடலூர் ராமமூர்த்தி தேவாலா ரவி சுப்பிரமணி ராமானுஜம் சுனில் பாவா உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

மற்றும் மாநில மாவட்ட சார்பு அணி மகளிர் அணியினர் கிளை கழக செயலாளர்கள் பூத் கமிட்டி பொறுப்பாளர் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.



**நீலகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தொகுதி 4 போட்டி தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். உடன் கூடுதல் கலெக்டர் கவுசிக் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் உட்பட பலர் உள்ளனர்.**

# ஈரோடு சி.என்.சி கல்லூரி அருகே புதிய பஸ் நிலையம்: பொதுமக்களிடையே கருத்து கேட்பு

**ஈரோடு, ஏப்.29 -**

ஈரோடு மத்திய பஸ் நிலையத்தில் இருந்து தினமும் உள் மாவட்டம் பிற மாவட்டங்கள் என 700 - க்கும் அதிகமான பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. இதனால் மாநகரப் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. இதை குறைக்கும் வகையில் ஈரோட்டில் 2 புதிய பஸ் நிலையங்கள் அமைக்க முடிவு செய்யப்பட்டது. அதன்படி தென் மாவட்டங்களுக்கு செல்லும் வகையில் சோலாரில் 25 ஏக்கரில் பஸ் நிலையம், சத்தி கோபியிலிருந்து வரும் பஸ்கள் நிறுத்தும் வகையில் கனிராவுத்தர் குளம் பகுதியில் புதிய பஸ் நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

சோலாரில் பஸ் நிலைய கட்டுமான பணிகள் நிறைவடைய உள்ள நிலையில், கனி ராவுத்தர் குளத்தில் பஸ் நிலையம் அமைப்பதற்காக மாநகராட்சி சார்பில் பொதுமக்களிடையே கருத்து கேட்கப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது:-

கனிராவுத்தர் குளத்தில் புதிய பஸ் நிலையம் அமைக்க 13.80 ஏக்கர் பரப்பளவில் இடம் தேர்வு செய்து, மண் பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட இடத்தை வீட்டு வசதி துறை அமைச்சர் முத்துசாமி, மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, மேயர் நாகரத்தினம், துணை மேயர் செல்வராஜ் மற்றும் மாநகராட்சி கமிஷனர் நேரில் பார்வையிட்டுள்ளனர். ரூ 60 கோடி மதிப்பில் புதிய பஸ் நிலையத்தின் கட்டுமான பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளது. இந் நிலையில் அந்த பஸ் நிலையம் அமைப்பது குறித்து பொது மக்களிடையே கருத்து கேட்கப்பட்டு வருகிறது. அதைப்போன்று விரைவில் பயன்பாட்டுக்கு வரவுள்ள சோழார் புதிய பஸ் நிலையம் குறித்தும் கருத்து கேட்கப்படுகிறது.

இவ்வாறு மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

# திம்பம் மலைப்பாதையில் தடுப்பு சுவரில் உலா வந்த சிறுத்தையால் வாகன ஓட்டிகள் அச்சம்

**ஈரோடு, ஏப்.29 -**

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப்பகுதியில் மான், யானை, சிறுத்தை, புலி, காட்டெருமை உள்ளிட்ட வனவிலங்குகள் வசித்து வருகின்றன. இவை அவ்வப்போது வனப்பகுதியை விட்டு வெளியேறி சாலையில் உலா வருவதும், சாலையைக் கடப்பதும் வாடிக்கையாகி வருகின்றன.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு திம்பம் மலைப் பாதை 8-வது கொண்டை ஊசி வளைவு அருகே வனப்பகுதியை விட்டு வெளியேறிய சிறுத்தை ஒன்று சாலையில் உலா வந்தது. சிறிது தூரம் தடுப்பு சுவரில் நடந்து சென்ற சிறுத்தை, பின்னர் அருகே உள்ள வனப்பகுதிக்குள் தாவி சென்று மறைந்தது.இந்த காட்சியை அவ்வழியாக வாகனத்தில் பயணித்த வாகன ஓட்டி ஒருவர் தனது செல்போனில் வீடியோ பதிவு செய்து சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ளார். தற்போது திம்பம் மலைப்பாதை வழியாக இரவு நேரங்களில் கனரக வாகனங்கள் அனுமதிக்கப்படாததால், வனவிலங்குகள் நடமாட்டம் அதிகளவில் காணப்படும் எனவும், திம்பம் மலைப் பாதை வழியாக பயணிக்கும் வாகன ஓட்டிகள் வாகனங்களை கவனத்துடன் இயக்குமாறும் வனத்துறையினர் வாகன ஓட்டிகளுக்கு அறிவுறுத்தி உள்ளனர். சாலையில் வந்த சிறுத்தையால் வாகன ஓட்டிகள் அச்சமடைந்துள்ளனர். கடந்த சில நாட்களாக இரவு நேரங்களில் திம்பம் மலைப்பாதையில் சிறுத்தை நடமாட்டம் அதிகரித்துள்ளது. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பும் திம்பம் மலைப்பகுதியில் தடுப்பு சுவரில் சிறுத்தை நடமாடியுள்ளது. இதனால் வாகன ஓட்டிகள் அச்சமடைந்துள்ளனர்.



**ஈரோட்டில் நடைபெற்ற மக்கள் சிந்தனைப் பேரவையின் பொதுக்குழுக் கூட்டத்தில் அரசுப் பள்ளி ஆசிரியர்ககளை மக்கள் சிந்தனைப் பேரவையின் தலைவர் த.ஸ்டாலின் குணசேகரன் சால்வை அணிவித்துப் பாராட்டினார்.**

# இழப்பீடு தொகையை ரூ.25 லட்சமாக உயர்த்தி வழங்க வலியுறுத்தி ஊட்டியில் பழங்குடி மக்கள் ஆர்ப்பாட்டம்



**ஊட்டி ஏப்.29-**

இழப்பீடு தொகையை ரூ.25 லட்சமாக உயர்த்தி வழங்க வலியுறுத்தி ஊட்டியில் பழங்குடி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

முதுமலை புலிகள் காப்பகத்திலிருந்து சட்ட விரோதமாக வெளியேற்றப்பட்ட பழங்குடி மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க வலியுறுத்தியும் நீலகிரி மாவட்ட பழங்குடி மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் நீலகிரி பழங்குடி மக்களின் சார்பில் ஊட்டியில் நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு ஏஐடியூசி மாவட்ட தலைவர் போஜராஜ் தலைமை தாங்கினார்.

மச்சிக்கொல்லி கமலாச்சி பண்டைய பழங்குடியினர் பேரவை தலைவர் ஆல்வாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில துணை தலைவர் குணசேகரன் மாவட்ட பொருப்பாளர் மகேந்திரன் முகமது கனி முதுகுளி சுரேஷ் ரீனா செவ்வினம்பரிதி உட்பட பலர் கலந்து கொண்டு கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது முதுமலை புலிகள் காப்பகத்திலிருந்து சட்ட விரோதமாக வெளியேற்றப்பட்ட பழங்குடியின மக்களுக்கு நீதி வழங்க வேண்டும் புலிகள் காப்பகத்திற்குள் வாழ்ந்து வருபவர்களை கட்டாயப்படுத்தி வெளியேற்றக்கூடாது வெளியேற்றப்பட்ட 18 வயது பூர்த்தியான அனைவருக்கும் இழப்பீடு தொகை வழங்கிட வேண்டும் இழப்பீடு தொகையை ரூ.25 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும் போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் காட்டு நாயக்கன் பனியன் முள்ளுகுறும்பர் பெட்டக்குறும்பர் இருளர் ஆகிய பழங்குடியின சமுதாயத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் திரளாக கலந்து கொண்டனர்.

# அதிகரட்டி கிராமத்திற்கு விடியல் பயண சலுகை பேருந்து விடக்கோரி மா.கம்யூ ஆர்ப்பாட்டம்



**ஊட்டி ஏப்.29-**

விடியல் பயண சலுகை அளித்திட கோரி அதிகரட்டி கிராமத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதிகரட்டி கிளையின் சார்பாக நேற்று (28-04-2025) காலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தமிழக அரசு வழங்கி வருகின்ற விடியல் பயண சலுகை என்பது கிராமப் பகுதியான அதிகரட்டி கிராமத்திற்கு முற்றிலும் மறுக்கப்பட்ட ஒன்றாக காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட துறைகளையும் அரசையும் தொடர்ந்து பலமுறை வலியுறுத்தியும் மேற்படி அதிகரட்டி கிராமத்துக்கு வரக்கூடிய பேருந்துகளில் விடியல் பயண சலுகை என்பது அதிகாரிகளால் மறுக்கப்படுகிறது.பலமுறை கடிதம் கொடுத்து பேச்சுவார்த்தை நடத்தியும் இன்று வரை அது செயல்படுத்தப்படவில்லை எனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதிகரட்டி கிளை மேற்கண்ட கோரிக்கையை உடனடியாக அதிகரட்டிக்கு வரும் பேருந்துகளில் அமல்படுத்த வேண்டும் என்று அதிகரட்டியில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த நிர்வாகி ஆல்தொரை தலைமை தாங்கினார். மேலும் சக்தி கனகராஜ் மோகன் முருகன் பாக்கியராஜ் போஸ் செந்தில் ஜானகி மற்றும் சுசிலாஆல்தொரை பாலாமணி மற்றும் சுசிலா லிங்கராஜ் உட்பட 50க்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு விடியல் பயண சலுகை உடனடியாக வழங்க வேண்டும் என்று கோஷங்களை எழுப்பினர.; இறுதியாக உடனடியாக மேற்படி சலுகை வழங்கப்படவில்லை என்றால் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக பொதுமக்களுக்கு திரட்டி பாலகொலா சந்திப்பு ஆறாவதுமைல் பகுதியில் மிகப்பெரிய அளவில் மறியல் போராட்டம் நடத்துவது என முடிவு செய்துள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# வீடு இல்லாதவர்களுக்கு இலவச பட்டா கேட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு



**ஈரோடு ஏப் 29-**

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்ப்பு நாள் கூட்டத்தில். தமிழ்நாடு நிலமற்றோர், வாடகை வீடுகளில் குடியிருப்போர் வாழ்வுரிமை சங்க தலைவர் எ.வேல்முருகன், பொதுசெயலாளர் ரா. தனபால் ,பொருளாளர் ஆஷிப் ,ஈரோடு மாவட்ட தலைவர் செந்தில்குமார் ஆகியோர் மனு அளித்துள்ளனர் .இந்த மனுவில் அவர்கள் கூறியிருப்பதாவது

ஈரோடு , கோபி ,சத்திய மங்கலம் உள்ளிட்ட வட்டார பகுதிகளை சேர்ந்த 170 க்கு மேற்பட்ட குடும்பங்கள் வீடுகள் இல்லாமல் தவித்து வருகின்றனர் . இவர்களுக்கு இலவச வீட்டு மனைபட்டா வழங்கும்படி வேண்டிக்கொள்கிறோம் மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்து எங்களுக்கு உதவுமாறு வேண்டுகிறோம் என்று அதில் கூறப்பட்டுள்ளது .

இந்த நிகழ்ச்சியில், இந்திய ஜீவா கம்யூனிஸ்ட் பொது செயலாளர் சுபஹான் மற்றும் விவசாயதொழிலாளர் சங்க மாநில தலைவர் டாக்டர் எம் எஸ் கணேஷ் கவுண்டர், அம்பேத்கர் மக்கள் முன்னனியைசேர்ந்து அந்தோணி ராஜ் ,

கோவைமாவட்ட செயலாளர்வேல்முருகன் ,திருப் பூர் செயலாளர் தனம் , உடுமலை நகரச் செயலாளர்நாகராஜ் , கோபி நகரச் செயலாளர்சி.சந்திரன் , சத்தி நகரச்செயலாளர், . திலகவதி , சத்தி நகரதலைவர் நீலவேணி , சத்தி ஒன்றிய தலைவர், பண்ணாரி ,ஈரோடு மாநகர தலைவர் மகேஸ்வரி , ஈ.ரோடு மாநகர செயலாளர் விஜயலட்சுமி உட்பட பல கலந்து கொண்டனர் தொடர்ந்து இந்த மனு தமிழக முதல்வருக்கு அனுப்பபப்பட்டுள்ளது

# ஊட்டி ரேடியோ வானியல் மையத்தில் தொடர் திருட்டில் ஈடுபட்ட 8 பேர் கைது

**ஊட்டி ஏப்.29-**

ஊட்டியில் அருகேயுள்ள ரேடியோ வானியல் மையத்தில் தொடர் திருட்டில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

நீலகிரி மாவட்டம் ஊட்டி முத்தோரை பகுதியில் மத்திய அரசுக்கு சொந்தமான வானொலி வானியற்பியல் தேசிய மையம் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ரேடியோ வானியல் மையம் செயல்பட்டு வருகிறது. இந்த வானியல் மையம் சர்வதேச அளவில் அங் கீ க ரிக் கப் பட்ட ஆராய்ச்சி மையமாகும்.

இந்தநிலையில் கடந்த சில நாட்களுக்கு முன் இந்த மையத்தின் பல இடங்களில் பயன்படுத்தாத அறைகளில் கதவுகள் மற்றும் பூட்டுகள் உடைக்கப்பட்டு இருந்தது தெரியவந்தது. அந்த அறைகளில் சோதனை செய்தபோது ரூ.1 லட்சம் மதிப்புள்ள 32 பேட்டரிகள் சோலார் ஹீட்டர் காப்பர் ஒயர்கள் உள்பட பல்வேறு பொருட்கள் திருடு போயிருந்தது தெரியவந்தது. மேலும் இந்த சம்பவங்கள் தொடர்ச்சியாக வெவ்வேறு நாட்களில் நடந்து உள்ளது. இது தொடர்பாக ரேடியோ வானியல் மைய விஞ்ஞானி கிருஷ்ணகுமார் ஊட்டி ஊரக போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார்.

புகாரின்பேரில் ஊட்டி ஊரக போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தினர். போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் கோவை மாவட்டத்தில் இருந்து கூலி வேலை உள்பட பல்வேறு காரணங்களுக்காக இங்கு வந்து கும்பலாக தொடர் திருட்டில் ஒரு குழு ஈடுபட்டு இருப்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் என்.எஸ். நிஷா உத்தரவின் பேரில் ஆய்வாளர் பழனியம்மாள் உதவி ஆய்வாளர்கள் ரூபன் சிக்கந்தர் ஆகியோர் தலைமையிலான குழுவினர் விசாரணை நடத்தி இந்த சம்பவத்தில் ஈடுபட்ட கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த கார்த்திக் (24) செல்வராஜ் (48) முருகேசன் (45) தங்கராஜ் (33) சிவாநந்து (22) முனியப்பன் (43) பாக்கியராஜ் (42) மனோஷ் (22) ஆகிய 8 பேரை கைது செய்தனர்.

இதுகுறித்து போலீசார் கூறுகையில் கைதான கார்த்திக் உள்பட 8 பேர் மீது நீலகிரி மாவட்டம் மற்றும் கோவை மாவட்டங்களில் பல்வேறு திருட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளது.

எமரால்டு தேனாடு கம்பை பகுதியில் அதிகம் நடைபெற்றுள்ள மோட்டார் திருட்டுகளில் இவர்களுக்கு தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது இது குறித்தும் விசாரணை நடத்தி வருகிறோம் சிறிய அளவிலான பொருட்களை மட்டும் இவர்கள் திட்டமிட்டு திருடி விற்பனை செய்து வந்துள்ளனர். இதன் காரணமாக பலரும் புகார் அளிக்காததால் நீண்ட நாட்களாக இவர்கள் இந்த திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டு உள்ளனர் என்றனர்.

# சாலை வசதி ஏற்படுத்தி தரவேண்டி பழங்குடியின மக்கள் கலெக்டரிடம் மனு

**ஊட்டி ஏப்.29-**

சாலை வசதி ஏற்படுத்தி தரவேண்டி பழங்குடியின மக்கள் கலெக்டரிடம் மனு அளித்தனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது-

நாங்கள் பங்களாபடிகை பகுதியில் 100-க்கும் மேற்பட்ட பழங்குடியின குடும்பங்கள் வசித்து வருகிறோம். கரிக்கையூர் முதல் பங்களாபடிகை வரை சாலை வசதி ஏற்படுத்த வேண்டி அரசு நிதி ஒதுக்கியது.

நிதி ஒதுக்கி பல ஆண்டுகளாகியும் பணிகள் நடைபெறாமல் தாமதப்பட்டு வருகிறது. ஒப்பந்ததாரர் வேண்டுமென்றே தாமதப்படுத்தி வருகிறார்.

நாங்கள் கேட்டால் சாலையை தோண்டி சேதப்படுத்தகிறார். இதனால் அந்த சாலையில் வாகனங்கள் செல்லமுடியாமல் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளோம்.

எனவே இந்த எங்கள் பகுதிக்கு உடனடியாக சாலை அமைத்து செப்பனிட வேண்டுகிறோம்.

இவ்வாறு மனுவில் கூறியுள்ளனர்.



**ஊட்டி கலெக்டர் அலுவலகம் முன்பு நீலகிரி மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கத்தினர் தலைவர் மகாதேவன் தலைமையில் துணை தலைவர் பால நந்தகுமார் செயலாளர் மேனகா ஆகியோர் முன்னிலையில் உதவி கருவூல அலுவலர் மற்றும் காவல்துறை உதவி ஆய்வாளர் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில் சீனியர் முதல் ஜூனியர் வரை ஏராளமான வழக்கறிஞர்கள் கலந்து கொண்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.**

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## கிருஷ்ணகிரி மாவட்ட மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது



கிருஷ்ணகிரி,ஏப்.29-

கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்ததாவது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில், வாரந்தோறும் திங்கட் கிழமை அன்று மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் (28.04.2025) நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம், வீட்டுமனைப் பட்டா, விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி, முதியோர் உதவித்தொகை, கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, சாலை வசதி மற்றும் மின் இணைப்;பு போன்ற பல்வேறு கோரிக்கைகள் குறித்து 344 மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. தகுதியில்லாத மனுக்களுக்கு உரிய விளக்;கத்தினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என கலெக்டர் ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

தொடர்ந்து, கலெக்டர் , மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, 8 மாற்றுத்திறனாளிகளுக்கு, தலா ரூ.6,359 வீதம் ரூ.50 ஆயிரத்து 872 மதிப்பில் தையல் இயந்திரங்கள் மற்றும் 2 மாற்றுத்திறனாளிக்கு தலா ரூ.1,06,500 வீதம் ரூ.2 இலட்சத்து 13 ஆயிரம் மதிப்பில் மின்கலம் பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகள் என மொத்தம் 10 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2 இலட்சத்து 63 ஆயிரத்து 872 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்பு திட்டம்) சா.தனஞ்செயன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் ரமேஷ் குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) தர்மராஜ், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் பத்மலதா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் முருகேசன், உள்ளிட்ட அனைத்து துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கிருஷ்ணகிரியில் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் இளைஞரணி ஆலோசனைக்கூட்டம்



கிருஷ்ணகிரி,ஏப்.29-

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் மாவட்ட அளவிலான இளைஞரணி ஆலோசனைக்கூட்டம் மாவட்டச் செயலாளர் வஜ்ஜிரவேல் தலைமையில் கிருஷ்ணகிரி தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாவட்டப் பொருளாளர் சிவப்பிரகாசம் வரவேற்பில், சிறப்பு அழைப்பாளர்கள்

மாநிலக் கொள்கைப் பரப்பு செயலாளர் அசோகன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ராஜா, ஆகியோர் கட்சியின் வளர்ச்சிக்கு இளைஞர்களின் செயல்பாடுகள் குறித்து ஆலோசனைகள் வழங்கினர்.நமது பாரம்பரிய வள்ளி கும்மி நடனம் பற்றிய முக்கியத்துவத்தை மகளிரணி செயலாளர் மாதம்மாள் எடுத்துரைத்தார், இறுதியாக மாவட்டத் தலைவர் அண்ணாதுரை அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி செயலாளராக கனகமுட்லு கிருஷ்ணன், மாவட்ட துணைச் செயலாளராக கொத்துப்பள்ளி ரமேஷ் உள்ளிட்ட பிற மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகளும் நியமனம் செய்யப்பட்டனர்.மேலும் கட்சியின் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட வளர்ச்சி பற்றியும், நிர்வாகிகளின் குறைபாடுகள் பற்றியும் சுட்டிக் காட்டப்பட்டது. கிருஷ்ணகிரி சட்டமன்றத் தொகுதியை முன்னிலைப் படுத்தி கிளைகள் இல்லாத ஊர்களில் புதிய கிளைகள் ஏற்படுத்தவும் , வருகின்ற சட்டமன்ற தேர்தலுக்கு பூத் கமிட்டிகளை அமைக்கவும் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டது. கட்சி ரீதியாக பர்கூர் ஒன்றியத்தை இரண்டாக பிரித்து கிழக்கு, மேற்கு என வகைப்படுத்தப்பட்டது. கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு பர்கூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் திருப்பதி செய்திருந்தார்.

## அதியமான் பப்ளிக் பள்ளியில் ஆண்டு விழா



கிருஷ்ணகிரி,ஏப்.29-

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதியில் செயல்பட்டு வரும் அதியமான் பப்ளிக் பள்ளி தாளாளர் சீனி திருமால் முருகன் தலைமையில் ஆண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக தனியார் பள்ளிகள் கூட்டமைப்பு தலைவர் நந்தகுமார் பங்கேற்று சிறப்புரை ஆற்றினார் பள்ளி மாணவ மாணவிகள் நாளைக்கு தங்களது தனி திறன்களை நடனம் மற்றும் செயல் விளக்கத்துடன் வெளிப்படுத்தினார்கள் இந்த நிகழ்வில் அதியமான் கல்வி நிறுவனங்களின் செயல் அலுவலர் ஷோபா திருமால் முருகன் நிர்வாக இயக்குனர் கணபதி ராமன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் கலைமணி சரவணகுமார் குழந்தைகளின் பெற்றோர்கள் அலுவலகப் பணியாளர்கள் இருப்பாள் ஆசிரியர்கள் பங்கேற்றனர்

## ராசிபுரத்தில் தேசிய அளவிலான வெற்று வில்வித்தை போட்டி

ராசிபுரம்,ஏப்.29-

ராசிபுரத்தில் தேசிய அளவிலான வெற்று வில்வித்தை போட்டியில் 100-க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற 7 பேர் ஆசிய அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்க உள்ளனர்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் தனியார் பள்ளியில் தேசிய அளவிலான வெற்று வில் சாம்பியன்ஷிப் 2025 ஆண்டு போட்டியானது கடந்த இரு நாட்களாக தமிழ்நாடு வெற்று வில் சங்க செயலாளர் கேசவன் தலைமையில் நடைபெற்றது. இப்போட்டியில் மகாராஷ்டிரா, ஆந்திரா, தமிழ்நாடு, பல்வேறு மாநிலங்களில் இருந்து 100க்கும் மேற்பட்ட வில் வித்தை வீரர் வீராங்கனைகள் கலந்து கொண்ட நிலையில் 3 பிரிவுகளில் போட்டியானது நடைபெற்றது. போட்டியில் வீரர், வீராங்கனைகள் இலக்கை நோக்கி வெற்று வில்களை எய்தனர். இப்போட்டியில் வெற்றி பெற்ற வீரர் வீராங்கனைகளுக்கு கோப்பைகளும், பாராட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த சாமுவேல், சஞ்சய், கண்ணன், பால்டேவியல், திரிலோக்சந்திரன் மற்றும் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த ஆதித்யா, மகாராஷ்டிராவை சேர்ந்த ஹர்ஷலதா ஆகிய 7 பேரும் ஜூலை மாதம் தாய்லாந்தில் நடைபெறவுள்ள ஆசிய அளவிலான போட்டிக்கு தேர்வாகியுள்ளனர்.

தின பூமி
நாளிதழ்
படியுங்கள்

## ஒகேனக்கல்லில் டாஸ்மாக் கடை அமைக்க அனுமதி வழங்க கூடாது: பொதுமக்கள் கலெக்டரிடம் மனு

தர்மபுரி,ஏப்.29-

ஒகேனக்கல்லில் டாஸ்மாக் கடை அமைக்க கூடாது என ஒகேனக்கல் மற்றும் அதன் அருகே உள்ள ராணிப்பேட்டை, ஊட்டமலை பொதுமக்கள் நேற்று தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுத்தனர்.

கொடுத்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஒகேனக்கல் தமிழகத்தில் மிகச்சிறந்த சுற்றுலா தளத்தில் ஒன்றாகும். இங்கு நாள்தோறும் தமிழகம், கர்நாடகா, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வது வழக்கம்.

அதுமட்டுமில்லாமல் ஒகேனக்கல், இந்திரா நகர் காலனி, ராணிப்பேட்டை, ஊட்டமலை, நாடார்கொட்டாய் உள்ளிட்ட கிராமங்களில் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகிறோம்.

இந்நிலையில் ஒகேனக்கல் சுற்றுலா தளத்தில் தமிழக அரசு சார்பாக டாஸ்மாக் கடை கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. டாஸ்மாக் கடை ஒகேனக்கலில் வந்து விட்டால் ஒகேனக்கலில் சுற்றுலா பயணிகள் மது அருந்திவிட்டு ஆற்றில் குளிக்கும் பொழுது உயிரிழப்பு ஏற்படும். மது பாட்டில்களை ஆற்றுக்கரை ஓரங்களில் உடைப்பதால் அதன் மூலமாக மனிதர்களுக்கு பாதிப்பு ஏற்படும்.

பரிசல் சவாரி செய்யும் பொழுது பரிசலில் அமர்ந்து மது அருந்திவிட்டு செல்வதால் மற்ற சுற்றுலா பயணிகளுக்கு இடையூறு ஏற்படும். டாஸ்மாக் கடை வந்தால் சுற்றுலா பயணிகளுக்கு பாதுகாப்பு இல்லாமல் உயிர் இழப்பு ஏற்படும். சுற்றுலா தளம் அழிவு நோக்கி செல்லும். கடந்த 17 ஆண்டுக்கு முன் ஒகேனக்கலில் டாஸ்மார்க் கடை செயல்பட்டு வந்தது. அப்பொழுது டாஸ்மாக் கடையில் மது வாங்கி குடித்துவிட்டு ஆற்றில் குளிக்கும் பொழுது தொடர்ந்து உயிர் சேதம் ஏற்பட்டு வந்தது. இதனை அறிந்த அப்போதைய கலெக்டர் அமுதா, சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி இங்கு இயங்கி வந்த டாஸ்மாக் கடைகளை மூடினார். ஒகேனக்கலுக்கு வரும் சுற்றுலா பயணிகள் மட்டும் இன்றி ஒகேனக்கல் மற்றும் அதன் அருகே வசித்து வரும் பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, ஒகேனக்கல்லில் டாஸ்மாக் கடை அமைக்கும் முடிவை கைவிட வேண்டும். இவ்வாறு கொடுத்த மனுவில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## சேலம் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடைபெற்றது



சேலம்,ஏப்.29-

பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காணவும், அடிப்படைத் தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்திடவும், பெண்களின் முன்னேற்றத்திற்கு தேவையான நடவடிக்கைகள் உள்ளிட்ட பணிகளில் அரசு அலுவலர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமெனவும், குறிப்பாக பொதுமக்கள் ஒருமுறை வழங்கிய மனுக்கள் மீண்டும் வராத வகையில் மனுவின் மீது உரிய தீர்வு வழங்கப்படுவதை அலுவலர்கள் உறுதி செய்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனடிப்படையில், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, பட்டா மாறுதல், சாதிச்சான்று, வேலைவாய்ப்பு, வங்கிக்கடன்கள், கல்வி உதவித்தொகை, திருமண நிதியுதவி, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித்தொகை, உதவி உபகரணங்கள், குடிநீர் வசதி, சாலை வசதி உட்பட அடிப்படை வசதிகள் மேம்பாடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தி 381 மனுக்கள் வரப்பெற்றன.

மேலும், மாற்றுத்திறனாளிகள் எவ்வித சிரமமும் இன்றி மனுக்களை வழங்கும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தின் தரைத் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென நடத்தப்பட்டு வரும் குறைதீர் முகாமில் வீட்டுமனைப் பட்டா, உதவி உபகரணங்கள், பராமரிப்பு உதவித்தொகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து இன்றைய தினம் அளிக்கப்பட்ட 14 மனுக்களைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இன்றைய தினம் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 6 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.80 இலட்சம் மதிப்பில் செயற்கை கை மற்றும் செயற்கை கால்களும், தாட்கோ மூலம் தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தின் சார்பில் பத்தாம் வகுப்பு முடித்த 2 மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகையாக தலா ரூ.1,000/- மும், விபத்து மரணம், இயற்கை மரணம் அடைந்த 2 நபர்களின் குடும்பத்தினருக்கு ரூ.5.20 இலட்சமும் என மொத்தம் ரூ.8 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்கள். இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) நடராஜன், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.ஜானகி, மாவட்ட வழங்கல் நல அலுவலர் கணேஷ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் இரா. மகிழ்நன், பழங்குடியினர் நல திட்ட அலுவலர் சுகந்தி பரிமளம், மாவட்ட மேலாளர் (பொ) தவளமதி உள்ளிட்ட அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நாமக்கல் மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பயனாளிகளுக்கு ரூ.3.74 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் கலெக்டர் ச.உமா வழங்கினார்



நாமக்கல்ஏப்.29-

நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் (28.4.2025) கலெக்டர் மருத்துவர் ச.உமா, தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது.

மக்கள் குறைத்தீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவை உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, வங்கி கடன் உதவி, குடிசை மாற்று வாரிய வீடு, குடிநீர் வசதி, சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வேண்டி பல்வேறு கோரிக்கைகள் குறித்து மொத்தம் 540 மனுக்களை கலெக்டர் மருத்துவர் ச.உமா, இ.ஆ.ப., அவர்களிடம் பொதுமக்கள் வழங்கினார்கள். மனுக்களைப் பெற்று கொண்ட கலெக்டர் மனுக்களை பரிசீலினை செய்து உரிய அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

தொடர்ந்து, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், 3 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.19,077/- மதிப்பில் மோட்டார் பொருத்திய தையல் இயந்திரம், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூ.2.51 இலட்சம் மதிப்பில் செயற்கை கால் மற்றும் 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.3,980/- மதிப்பில் ரோலேட்டர் என மொத்தம் 5 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.74 இலட்சம் மதிப்பில் உதவி உபகரணங்களை கலெக்டர் மருத்துவர் ச.உமா, வழங்கினார்.

முன்னதாக, பரமத்தி வேலூர் வட்டம், கூடச்சேரி கிராமத்தை சேர்ந்த கௌரி சங்கர் என்பவர் திருமணி முத்தாறில் நீரில் மூழ்கி உயிரிழந்ததையடுத்து அவரது குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதி உதவியாக ரூ.1.00 இலட்சத்திற்கான காசோலையையும், குமாரபாளையம் வட்டம், ஆயக்காட்டூர் பகுதியை சேர்ந்த தனபால் வன்கொடுமையால் இறந்ததையடுத்து அவரது சகோதரர் தினேஷ்குமார் என்பவருக்கு நாமக்கல் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் சமையலர் பணியிடத்திற்கான பணி ஆணையினையும் கலெக்டர் மருத்துவர் ச.உமா, வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் ரெ.சுமன், தனித்துணை கலெக்டர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ச.பிரபாகரன், மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கலைச்செல்வி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

## தர்மபுரி மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் சதீஷ் தலைமையில் நடைபெற்றது



தர்மபுரி,ஏப்.29-

தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் நடந்த பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் 680 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன.

தர்மபுரி மாவட்ட கலெக்டர் அலுவலக கூடுதல் கூட்ட அரங்கில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் சதீஷ் தலைமை தாங்கி பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

இந்த கூட்டத்தில் சாலை வசதி, குடிநீர் வசதி, பேருந்து வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகள் வேண்டியும், பட்டா வேண்டுதல், சிட்டா பெயர் மாற்றம், புதிய குடும்ப அட்டை வேண்டுதல், வாரிசு சான்றிதழ், வேலைவாய்ப்பு, இலவச வீட்டுமனை பட்டா, முதியோர் ஓய்வூதியத் தொகை உள்ளிட்ட இதர உதவித் தொகைகள் உட்பட பல்வேறு கோரிக்கைகள் குறித்தும் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகைகள், உபகரணங்கள் வேண்டியும் மொத்தம் 680 கோரிக்கை மனுக்கள் வரப்பெற்றன.

கூட்டத்தில் கலெக்டர் பேசுகையில், குறைதீர்க்கும் நாள் கூட்டங்களில் பெறப்படும் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களுக்கு முக்கியத்துவம் அளித்து, விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் அறிவுறுத்துள்ளார்..

இந்த பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தர்மபுரி மாவட்டம் முன்னாள் படைவீரர் நலத்துறையின் சார்பில் 2022-ம் ஆண்டு படைவீரர் கொடி நாள் நிதியாக ரூ.5,00,000-க்கு மேல் மிகை வசூல் புரிந்த தர்மபுரியை சேர்ந்த 2 மாவட்ட அலுவலர்களுக்கு தமிழக கவர்னரின் பாராட்டு சான்றிதழ் மற்றும் தலா 30 கிராம் வெள்ளி பதக்கங்களை கலெக்டர் சதீஷ் வழங்கினார்.

இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, முன்னாள் படைவீரர் நலத்துறை உதவி இயக்குநர் பிரேமா, சமூகப் பாதுகாப்புத் திட்ட தனித்துணி கலெக்டர் சுப்பிரமணி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
17-A/2, Meyyanur Road,
Salem - 636 004.
Ph: 0427- 2334165
E-Mail: salemedi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2001/4003
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

**அசல் ஆவணம் கிடைக்கவில்லை**

சேலம் -636 203, சந்தியூர், சந்தியூர் ஆட்டையாம்பட்டி, மொட்டையன்காடு, க.எண்.2/56, நடேசன் மகனாகிய நந்தகுமார் எனது கட்சிக்காரரின் தகவல் பெற்று கொடுக்கும் பொது அறிவிப்பு யாதெனில், சேலம் மேற்கு இணை சார்பதிவாளர் எண்.3, ஆவண எண்.**2182/1995** ஆக பதிவு செய்யப்பட்டு எனது கட்சிக்காரரின் சுவாதீனத்தில் இருந்து வந்த சொத்தின் அசல் ஆவணங்களை எனது கட்சிக்காரருடைய வாரிசுகளுக்கு எழுதிக்கொடுக்கும் பொருட்டு, கடந்த **11.04.2025** மதியம் **12.00** மணியளவில் எனது கட்சிக்காரின் இருசக்கர வாகனத்தில் சேலம் டூ ஏத்தாப்பூர் வழி சென்றபோது முத்துமலை முருகன் கோவில் அருகே எனது கட்சிக்காரரின் இருசக்கர வாகனத்தின் முன்பகுதியில் வைத்திருந்த கைப்பை கூட்ட நெரிசலில் தவறி கீழே விழுந்து விட்டது. வந்த வழியே சென்று பார்த்தும் அக்கம் பக்கம் விசாரித்தும் எனது கட்சிக்காரரின் கைப்பையில் வைத்திருந்த அசல் ஆவணங்கள் கிடைக்கவில்லை. இது தொடர்பாக தமிழ்நாடு காவல் இணையதள முகவரியில் புகார் அளித்து மேற்படி புகாருக்கு மனு எண். **CEN25220094** வழங்கப்பட்டு புகார் மனுவின் விசாரணை நிலுவையில் உள்ளது. மேற்கண்ட அசல் ஆவணத்தை யாரேனும் கண்டு எடுத்தால் எனது கட்சிக்காரரிடமோ அல்லது என்னிடமோ கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

இப்படிக்கு: D.R.சிவக்குமார்,B.A.,B.L., வழக்கறிஞர்,
க.எண்.239, ராமநாதன் காம்ப்ளக்ஸ், ஏ.எம்.ரோடு, பட்டைகோவில், சேலம் 636 001.

**அசல் ஆவணம் கிடைக்கவில்லை**

நாமக்கல் - 636 301, இராசிபுரம், அத்தனூர் புதூர், கதவு எண். 8/8 பழனிவேல் மகனாகிய சஞ்சிவ் எனது கட்சிக்காரரின் தகவல் பெற்று கொடுக்கும் பொது அறிவிப்பு யாதெனில், இராசிபுரம் சார்பதிவாளர் அலுவலகம், ஆவண எண்.**35/2013** ஆக பதிவு செய்யப்பட்டு எனது கட்சிக்காரரின் சுவாதீனத்தில் இருந்து வந்த சொத்தின் அசல் ஆவணங்களை எனது கட்சிக்காரருடைய வாரிசுகளுக்கு எழுதிக்கொடுக்கும் பொருட்டு, கடந்த **24.04.2025** மதியம் **1.30** மணியளவில் எனது கட்சிக்காரின் இருசக்கர வாகனத்தில் சேலம் டூ ஏத்தாப்பூர் அருகே சென்றபோது ஏத்தாப்பூர் பேருந்து நிலையம் அருகே எனது கட்சிக்காரரின் இருசக்கர வாகனத்தின் முன்பகுதியில் வைத்திருந்த கைப்பை தவறி கீழே விழுந்து விட்டது. வந்த வழியே சென்று பார்த்தும் அக்கம் பக்கம் விசாரித்தும் எனது கட்சிக்காரரின் கைப்பையில் வைத்திருந்த அசல் ஆவணங்கள் கிடைக்கவில்லை. இது தொடர்பாக தமிழ்நாடு காவல் இணையதள முகவரியில் புகார் அளித்து மேற்படி புகாருக்கு மனு எண். **CES25219897** வழங்கப்பட்டு புகார் மனுவின் விசாரணை நிலுவையில் உள்ளது. மேற்கண்ட அசல் ஆவணத்தை யாரேனும் கண்டு எடுத்தால் எனது கட்சிக்காரரிடமோ அல்லது என்னிடமோ கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

இப்படிக்கு: D.R.சிவக்குமார்,B.A.,B.L., வழக்கறிஞர்,
க.எண்.239, ராமநாதன் காம்ப்ளக்ஸ், ஏ.எம்.ரோடு, பட்டைகோவில், சேலம் 636 001.

**பெயர் மாற்றம்**

எனது பெயர் **சின்னப்பயன் த/பெ. பிச்சான்** என்ற பெயரும் **P.Periasamy** என்ற பெயரும் என்னையே குறிக்கும் என்றும் இரு பெயர்களும் ஒருவரே என்றும் உறுதி கூறுகிறேன். பிறந்த தேதி :**22.10.1984** (பிறந்த மாவட்டம் : சேலம் மாவட்டம்) எனது முகவரி : க.எண்.10.நடு வீதி, கோலாத்துக்கோம்பை கிராமம், வாழப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் தமிழ்நாடு - 636 139. என்ற விலாசத்தில் வசித்து வரும் நான் இனி வரும் காலங்களில் எனது பெயரை **சின்னப்பயன் பிச்சான்** என அழைக்கப்படுவேன் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சின்னப்பயன்**

மாண்புமிகு சேலம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் முன்பாக
**M.A.No. 29/2025 In C.C.No. 43/2025**

அம்பிகா ...மனுதாரர்

/ Vs /

1. சரண்யா, க/பெ.தனசேகர் 3/23, புளியம்பட்டி, ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டம்.
2. கிளை மேலாளர், கனரா வங்கி, சேலம் -5.
3. ரீஜினல் மேனேஜர், கனரா பேங்க், சேலம் -16,

...எதிர்மனுதாரர்கள்

1 ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

மேற்கண்ட வழக்கானது கனம் சேலம் மாவட்ட நுகர்வோர் குறைதீர் மன்றம் முன்பாக முதலாம் எதிர் மனுதாரரின் வருகைக்காக **02.05.2025** -ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் 1 ம் பிரதிவதியாகிய தாங்கள் 10.30 மணிக்கு நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராக வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி வழக்கானது தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

J.கோபிநாத்,B.A.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

**வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கிருஷ்ணகிரி**
**ந.க.எண்.மே.எ.அதிமு.2777/2025/எப்**
**நாள்: 25.04.2025**

சின்னபாப்பா, க/பெ.பொன்னுசாமி,
கதவு எண்.51, ஜோதி நகர் கிராமம்,
உப்பாரப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 207
......மனுதாரர்

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.
........எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய, எனது தந்தை திரு.குட்டையன்(எ) குப்பாகவுண்டர் த/பெ. லேட்.கிச்சான் என்பவர் கடந்த 10.04.2002-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், உப்பாரப்பட்டி அஞ்சல், ஜோதி நகர் கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

//உத்தரவுப்படி//

மனுதாரர்
சின்னபாப்பா, க/பெ.பொன்னுசாமி,
கதவு எண்.51, ஜோதி நகர் கிராமம்,
உப்பாரப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 207
செல்: 8072910447

**வருவாய் உட்கோட்ட நடுவர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் கிருஷ்ணகிரி**
**ந.க.எண்.மே.எ.அதிமு.2778/2025/எப்**
**நாள்: 25.04.2025**

சின்னபாப்பா, க/பெ.பொன்னுசாமி,
கதவு எண்.51, ஜோதி நகர் கிராமம்,
உப்பாரப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 207
......மனுதாரர்

உயர்திரு.வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
கிருஷ்ணகிரி.
........எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய, எனது தாயார் திருமதி.வேடியம்மாள் க/பெ. லேட்.குட்டையன்(எ) குப்பாகவுண்டர் என்பவர் கடந்த 20.10.2005-ம் தேதியில் கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், உப்பாரப்பட்டி அஞ்சல், ஜோதி நகர் கிராமத்தில் இறந்துவிட்டார். மேற்படி அவரது இறப்பை பதிவு செய்து இறப்பு சான்றிதழ் வழங்கிட கோரி மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 15 தினங்களுக்குள் மேற்படி வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ளலாம்.

//உத்தரவுப்படி//

மனுதாரர்
சின்னபாப்பா, க/பெ.பொன்னுசாமி,
கதவு எண்.51, ஜோதி நகர் கிராமம்,
உப்பாரப்பட்டி அஞ்சல்,
ஊத்தங்கரை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம் 635 207
செல்: 8072910447

**IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, HARUR.**
**R.E.P.No. 40/2024 In O.S. No. 278/2012**

**R.Selvam, (Aged 47)**
**S/o. Munusamy**
Sooramangalam,
Salem - 636 005.
...Petitioner / D.H.

/Vs/

**S.Jayapal (Aged 58)**
**S/o. Sekar,**
D. No. 40, Dharmalinga Nagar,
Old Sooramangalam,
Salem-636005
...Respondent/J.D.

Notice to the Respondent

Please take notice that the above petition was filed by the above petitioner for claiming award amount of arbitration from the respondent. The above said case is posted on **20.06.2025** for your appearance. Plase do appear and file objections if any, at the above said court, on the above said date, at **10.00 AM** either in person or through an advocate. Failing which the petition will be decided on merits.

/By Court Order/

**R.NAVANEETHAKRISHNAN, B.A.,L.L.B.,**
**K. MAGESHWARI, B.Sc.,L.L.B.,**
Advocates, Salem.

சிறப்பு சார்பு நீதிமன்றம் எண்.1, சேலம்.
**M.C.O.P.No. 2096/2024**

கோவிந்தம்மாள், க/பெ. குமார்,
க.எண்.4/245, குதிரை பாலி கரடு,
எருமாபாளையம்,சேலம் - 636 105.
...மனுதாரர்

/ Vs /

C.ஜெயபிரகாஷ், த/பெ. R.சிதம்பரம்,
க.எண்.2/208பி, வன்னியர் நகர்,
அழகாபுரம் புதூர்,
சேலம் - 636 016.
...1 ம் எதிர்மனுதாரர்

1 ம் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அறிவிப்பு

மனுதாரர் மோட்டார் வாகன விபத்தில் அடிபட்டு அதில் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள மேற்படி வழக்கில் தாங்கள் கூமுகம் நீதிமன்றத்தில் ஆஜர் ஆவதற்காக வருகின்ற **11.06.2025** -ம் தேதியில் வாய்தா போடப்பட்டுள்ளது. அன்று நீங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறினால் மேற்படி வழக்கு தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

/கோர்ட் உத்தரவுப்படி/

C.ஜெயக்குமார்,B.Com.,B.L.,
வழக்கறிஞர்,சேலம்.

